# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சைபரீட்சை 2023

ஆண்டு: 6 திகதி: 25.11.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா
செல்வி ஜனனி குலராஜா

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 30 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 30 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

கீழே கொடுக்கப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு பூரணமான விடைதருக.

கேட்போருக்கு இன்பத்தை அளிப்பது இசை. பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது நடனக் கலையாகும். இவற்றில் இசை தனித்து இயங்கக்கூடியது. தனியே பாடல்களைப் பாடலாம். இசைக்கருவிகளை வாசிக்கலாம். ஆனால் இசையின்றி நடனமாடமுடியாது. பாடல்களுக்கு ஏற்ப நடனம் ஆடலாம். இசைக்கருவிகளின் பக்க வாத்திய இசைக்கேற்பவும் நடனம் ஆடலாம்.

பொழுது விடியும்போது பறவைகள் இராகம்பாடுகின்றன. நதி ஓடும்போது சல,சல என்ற தாள சத்தம் கேட்கிறது. மூங்கில் மரங்களின் துவாரங்களினூடாக காற்று வீசும்போது குழல் இசை தோன்றுகிறது. மழையின் வரவைக் கண்டு மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. மகுடியின் இசை கேட்டு, பாம்பு ஆடுகின்றது. எனவே, இயற்கையின் நிகழ்வுகளிலிருந்து மனிதன் இசையையும், நடனத்தையும் கலைகளாக மாற்றினான்.

இசைக் கருவிகளில் தோல் வாத்தியங்கள் மிருதங்கம், தவில், தபேலா போன்றனவாகும். புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன துளை வாத்தியங்களாகும். வீணை, வயலின் போன்றன நரம்பு வாத்தியங்களாகும். இந்த வாத்தியங்கள் யாவும் தமிழ்க் கலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன. மங்கல நிகழ்ச்சிகளிலும், துன்பியல் நிகழ்ச்சிகளிலும் இசைக்கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இயல், இசை, நாடகம் என்பன முக்கலைகளாகும்.

1. இந்த உரைப்பகுதிக்கு ஏற்ப தலைப்பு ஒன்று எழுதுங்கள்.

2. இயற்கையாக இசை தரும் இரண்டு இயற்கை நிகழ்ச்சிகள் தருக.

3. தோல் வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

4. துளை வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

5. நரம்பு வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

---

6. புல்லாங்குழல் எந்த மரத்தில் இருந்து பெரும்பாலும் தயாரிக்கப்படுகிறது?

---

7. மழையின் வரவைக்கண்டு மயில்கள் என்ன செய்யும் என்று உரையில் கூறப்பட்டுள்ளது?

---

8. உங்களுக்குப் பிடித்த ஒரு இசைக் கருவியின் பெயர் தருக.

---

9. பொருத்தமாக இணையுங்கள்.

   1. பாட்டு - வாசிக்கலாம்
   2. வாத்தியம் - ஆடலாம்
   3. நடனம் - பாடலாம்

10. முக்கலைகளும் எவை?

---

(10x3 = 30 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

சொற்களை சேர்த்தும் பிரித்தும் எழுதுங்கள்.

குருவி + கூடு = ______________________________

மழை + துளி = ______________________________

கோழி + கூடு = ______________________________

பாம்பு + ஆட்டம் = ______________________________

பூ + சூடினாள் = ______________________________

அழைப்பிதழ் = ____________________ ____________________

உரையாற்றினார் = ____________________ ____________________

பழரசம் = ____________________ ____________________

திரைப்படம் = ____________________ ____________________

வகுப்பறை = ____________________ ____________________

(10x1 = 10 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

பொருள் விளங்க ஐந்து சொற்களுக்குக் குறையாத வசனம் எழுதுங்கள்.

1. மலை :-

---

2. மடி :-

---

3. சூடு :-

---

4. வானம் :-

---

5. காலை :-

---

(5x2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
| --- | --- | --- | --- | --- | --- |

தொடங்கப்பட்ட கீழ்வரும் கதையை தொடர்ந்து 50 சொற்களுக்கு குறையாது உங்கள் கற்பனைக் கதையாக எழுதி முடியுங்கள்.

எனது வகுப்பு ஆசிரியர் கடல்வாழ் உயிரின சாலைக்கு கல்விச் சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்த நாளில் இருந்து நானும் எனது வகுப்பு நண்பர்களும் அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். அந்த நாளும் வந்தது. காலை 7 மணிக்கு வகுப்பு ஆசிரியர்களும், உதவியாசிரியர்களும், மாணவர்களும் பாடசாலை மைதானத்தில் கூடினோம். பெற்றோர் எம்மை வழியனுப்ப வந்திருந்தார்கள். மாணவர்கள் இருவர், இருவராக வரிசையில் நிற்க, பேருந்து வண்டியும் வந்து நின்றது. ..................

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

சிட்னி மாநகரில் அமைந்துள்ள துறைமுகபாலம் பற்றி தாய்நாட்டில் இருக்கும் உமது உறவினருக்கு 50 சொற்களுக்கு குறையாது கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தலைப்பு ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1. தந்தையர் தினம்,
2. வெள்ளப் பெருக்கு,
3. தமிழ் கலாசார உணவு ஒன்று தயாரித்தல்,
4. அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள்.